# கூட்டுறவுத்துறை

# கூட்டுறவு சங்கங்களின் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், திருவண்ணாமலை மாவட்டம்

மாவட்ட ஆட்சியர் பெருந்திட்டவளாகம் திருவண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம்.

**விளம்பரம் எண். 04/2020** **நாள்:15.06.2020**

திருவண்ணாமலை மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளுக்கு விற்பனையாளர் பதவிக்கு நேரடி நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் 16.06.2020 முதல் 15.07.2020 பிற்பகல் 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| நேரடி நியமன பதவி விவரம் | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| நியாய விலைக்கடை விற்பனையாளர் | 1.தொகுப்பு ஊதியம் ரூ 5000/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br><br>2.ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் (4300-12000) | 1.கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை | 16 |
| | | 2.வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச்சங்கம் | 02 |
| | | 3.தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம். | 165 |
| | | மொத்த காலிப்பணியிடங்கள் | 183 |

**நிபந்தனைகள்:-**

மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின்போது அரசு பணியாளர்கள் தேர்வுக்குப் பின்பற்றப்படும் வகுப்பு சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் கீழ்கண்டவாறு பின்பற்றப்படும்

| பதவி | மொத்த காலிப் பணியிடம் | வகுப்பு வாரி இட ஒதுக்கீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொதுப் போட்டி | பிற்படுத்தப் பட்டோர் | பிற்படுத்தப்பட் டோர் (இஸ்லாமியர்) | மிகவும் பிற்படுத்தப்பட் டோர்/ சீர்மரபினர் | ஆதி திராவிடர் | ஆதி திராவிடர் (அருந்ததி யர்) | பழங்குடியி னர் |
| நியாய விலைக்கடை விற்பனையாளர் | 183 | 57 | 49 | 7 | 36 | 26 | 6 | 2 |

**குறிப்பு:**

1. காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்கு உட்பட்டது.
2. நியமனத்தின்போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாதபோது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதி வாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.
3. ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் (கண் பார்வையற்றோர் தவிர) மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், இந்த நியமனத்தின்போதும் பின்பற்றப்படும்.
4. மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் மேல் முறையீடு உரிய காரணங்களுடன் செய்யப்பட வேண்டும். ஆதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.
5. **உடற்தகுதி சான்றிதழ்:-**
   மேற்படி பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் உடற்தகுதிச் சான்றிதழினை பெற்று கூட்டுறவு நிறுவனத்தில் பணியில் சேரும்போது சமர்ப்பிக்க வேண்டும், மாற்றுதிறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவரிடம் சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

1. <u>தகுதிகள்:-</u>

**அ. வயது (01.01.2020 அன்று)**

1. விண்ணப்பதாரர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். (அதாவது 01.01.2002க்கு முன்னர் பிறந்தவராக இருக்க வேணடும்.)

2. விண்ணப்பதாரர்கள் 01.01.2020 அன்று கீழ்க்கண்ட வயதினைப் பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| i) | ஆதி திராவிடர், அருந்ததியர், பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்பினைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | அதிகபட்ச வயது வரம்பு இல்லை |
| ii) | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | |
| iii) | மேற்படி வகுப்பினைச் சாராத இதர விண்ணப்பதாரர்கள் | 30 வயது |
| iv) | மாற்றுத் திறனாளிகளுக்கு அரசாணைப்படி வயது வரம்பு விலக்களிக்கப்படும் | |

2. **<u>கல்வித் தகுதிகள் (01.01.2020 அன்று) :</u>**

நியாய விலைக் கடை விற்பனையாளர் பதவிக்கு மேல்நிலை வகுப்பு தேர்ச்சி (+2 தேர்ச்சி அல்லது அதற்கு சமமான கல்வித்தகுதி (10,+2)

**3. தமிழ் மொழித் திறன்:-**

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று தமிழ் மொழியில் எழுதப் படிக்க போதுமான திறன் உள்ளவராக இருக்க வேண்டும்.

4. <u>உடற்தகுதி சான்றிதழ்:-</u>

மேற்படி பதவிகளுக்குத் தேர்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழினைச் சமர்ப்பிக்க வேண்டும். தகுதி பெற்ற கண் மருத்துவரிடம் பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். **மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் மேற்படி பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பெற்ற சான்றிதழனையும் சமர்ப்பிக்க வேண்டும்.**

<u>5. தெரிவு முறை:-</u>

மேற்படி காலிப் பணியிடங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகிய அனைத்திற்கும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும். இப்பணியிடங்களுக்கான நபர்கள், நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில், வகுப்பு வாரி சுழற்சிக்கு உட்பட்டும், காலிப்பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்குக் கட்டாயமாக வருகை புரியவேண்டும். நேர்முகத் தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி பணியிடங்களுக்கு தேர்தெடுக்கப்பட மாட்டார்கள்.

<u>6. காலிப் பணியிடங்களுக்கான விருப்பம் தெரிவித்தல்:-</u>

விண்ணப்பதாரர்கள், தாங்கள் எந்த கூட்டுறவு சங்கத்தின் நியாய விலைக் கடைக்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்தான விருப்பத்தை நேர்முகத் தேர்வின்போது தெரிவிக்க வேண்டும். விண்ணப்பதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கான பணியிடம் ஒதுக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டால் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் முடிவின்படி அவர்களுக்குப் பணியிடம் ஒதுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது.

<u>7. விண்ணப்பங்கள் விநியோகித்தல்:-</u>

மேற்படி நியாய விலைக் கடை விற்பனையாளர் பணி நியமனங்களுக்கான விண்ணப்பப் படிவத்தை கீழ்க்கண்ட அலுவலகங்களின் **16.06.2020 முதல்15.07.2020 வரை** அனைத்து வேலை நாட்களிலும், வேலை நேரத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

1. **திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் அனைத்து கிளைகள்.**
2. **நகர கூட்டுறவு வங்கி, திருண்ணாமலை, போளூர், ஆரணி, திருவத்திபுரம்.**
3. **வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் (CMS) திருவண்ணாமலை, செங்கம், போளூர், ஆரணி, வந்தவாசி, செய்யாறு**
4. **தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, திருவண்ணாமலை, தண்டராம்பட்டு, செங்கம், போளூர், துரிஞ்சாபுரம், ஆரணி, செய்யாறு, வந்தவாசி**

**8.விண்ணப்பப் பதிவுக் கட்டணம்:-**

நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் நியமனத்திற்கான விண்ணப்பப் **பதிவுக் கட்டணம் ரூ.150/-** ஆதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இந்த விண்ணப்பப் பதிவுக்கட்டணம் செலுத்த தேவையில்லை. மேற்படி கட்டணம் **மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகள் அல்லது தேசியமயாக்கப்பட்ட வங்கிகளில், தலைவர், மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், திருவண்ணாமலை மாவட்டம்,** திருவண்ணாமலையில் மாற்றத்தக்க வகையில் வரைவோலையாக எடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் எண், மற்றும் விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான பெயர் மற்றும் விண்ணப்பதாரரின் பெயர் ஆகியவை வரைவோலையின் பின்புறம் எழுதப்பட வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகள் சமூக அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவ சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும்.

ஆதரவற்ற விதவை என்பது அனைத்து வழியிலிருந்தும் பேறும் மொத்த மாத வருமானம் ரூ.4000/- (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம் ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்று பெற்ற சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவரால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவை கருதப்பட மாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார்.

வரைவோலை இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். ஒரு முறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணம் கொண்டும், திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

**9.விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய இணைப்புகள்:-**

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களையே இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும், அசல் சான்றிதழ்களை விண்ணப்பபடிவத்துடன் அனுப்பக் கூடாது.

**10.நேர்முகத் தேர்வு-**

நேர்முகத் தேர்விக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பத்தில் குறிப்பிட்ட தபால் முகவரிக்கு அனுப்பப்படும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும், இது தொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது.

**11.தடையில்லா சான்றிதழ்:-**

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே அரசுப் பணியில் பணியாற்றுபவர்களாக (நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ) இருக்கும் பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தேவையான தடையில்லா சான்றிதழினை (NOC) நேர்முகத் தேர்வின்போது சமர்பிக்க வேண்டும்.

**12.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெறுதல்:-**

**அ.** 1. விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன் கீழ்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. விண்ணப்பப் படிவங்கள் பந்து முனை பேனா (Ball Point Pen) கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் இட வேண்டும். கையொப்பம் இல்லாமல் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பப் படிவத்தில் அனைத்து கலங்களும், இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் அடிப்படையில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
4. விண்ணப்பப் படிவத்துடன் பதிவுக்கட்டணத்திற்கான வரைவோலை தவறாமல் இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பதார் அவரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டுவதுடன் தனி ஒரு புகைப்பட்தினை இணைக்க வேண்டும். மேலும் சுய முகவரியிட்ட ரூபாய் 27.00க்கான தபால் வில்லை ஒட்டிய 24x10 செ.மீ.உறையினையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப அவேண்டும்.

**ஆ.** பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தபால் மூலமாக அல்லது நேரிலோ பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**தலைவர்,**
**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், இணைப்பதிவாளர் அலுவலகம்**
**மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம் (மாவட்ட விளையாட்டு அரங்கம் பின்புறம்)**
**வேங்கிக்கால், திருவண்ணாமலை - 606604**

என்ற முகவரிக்கு **15.07.2020** அன்று **மாலை 5.45க்கு** முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாக மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். **15.07.2020** அன்று **மாலை 5.45க்கு** பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும், அஞ்சல் தாமதத்திற்கான காரணங்களுக்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பு ஏற்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**தலைவர்,**
**கூட்டுறவு சங்கங்களின் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,**
**திருவண்ணாமலை மாவட்டம்**